DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**Spl.S.C. No.1/2024**

PROSECUTION WITNESS No. 27

Name : சேரன்

Father's Name : பாலகிருஷ்ணன்

Age : 65

Address :

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 25th day of November, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் 2018 ம் வருடம் ஏப்ரல் மாதம் கே8, அரும்பாக்கம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். முதலாவது எதிரி ஆய்வாளர் ராமலிங்கம், இரண்டாவது எதிரி காவலர் ஆனந்த வினோத் சிங், மூன்றாவது எதிரி காவலர் விஜயகுமார். 11.01.2012 அன்று நான் கே7, ஐ.சி.எப். காவல் நிலையத்தில் இரவு நேர பாரா காவலில் இருந்தேன். அப்போது, என்னோடு யார் பணியிலிருந்தது என்பது தற்போது எனக்கு ஞாபகமில்லை. அன்று

நான் இரவு பணியிலிருந்த போது ஒன்றும் நடக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் நீதித்துறை நடுவர் எண்.1, திருவள்ளூர் அவர்கள் முன்பு 164 குவிமுச வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அதிலுள்ளது என்னுடைய கையொப்பம் தான். அந்த 164 குவிமுச வாக்குமூலம் **அ.சா.ஆ.24**. இது சம்பந்தமாக என்னை CBCID போலீசார் விசாரித்தார்கள்.

**சாட்சி தன் முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு நீதிமன்றம் அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:—**

11.01.2012 அன்று இரவு பாரா காவலில் கே7 ICF காவல் நிலையத்தில் பணியிலிருந்தேன் என்றும், நான் ஓய்வறைக்குச் சென்று உடைகளைக் களைந்து சீருடைக்கு மாறிய போது எனக்கு உள்ளிருந்து அலறல் சத்தம் கேட்டது என்றும், நான் உள்ளே சென்று பார்த்த போது குற்றப்பிரிவு ஆய்வாளர் ராமலிங்கம், தலைமைக் காவலர் ஏழுமலை, காவலர் ஆனந்த வினோத்சிங், ஆய்வாளரின் ஓட்டுநர் விஜயகுமார் ஆகியோர் அறையினுள் இருந்தார்கள் என்றும், நான் சென்று கேட்ட போது இவன்தான் FoP நித்யா காதலர்களிடமிருந்து கைபேசியைப் பறிப்பவன் என்று கூறினார்கள் என்றும், அதன்பிறகு நான் பாரா காவலுக்கு சென்றேன் என்றும், GD

Pocket ஆகியவற்றை எழுதி முடித்து இரவு 10 மணியளவில் அந்த அறைக்கு சென்று பார்த்த போது மூன்றரை உயரம் கொண்ட இரண்டு மேஜைகளுக்கு இடையே பன்றிக் கட்டு முகம் மார்பு அளவுடன் தரையில் படுமாறு கை, கால்களை பின்புறமாக இரும்பு ராடு கொடுத்து கட்டி தொங்கவிட்டிருந்தார்கள் என்றும், நான் ஆய்வாளரிடம் நிறைய நேரம் ஆகிவிட்டது என்றும், அவிழ்த்து விடுமாறு கூறினேன் என்றும், அப்போது நீ என்ன உதவி ஆணையரா என்று கேட்டார் என்றும், எனக்கு நீ சொல்லக் கூடாது உன் வேலையைப் பார் என்று கூறினார் என்றும், மறுபடியும் 11 மணிக்கு அவிழ்த்து விடுவீர்களா என்று கேட்ட போது அப்போதும் வேலையைப் பார்க்குமாறு கூறினார்கள் என்றும், எதுவானாலும் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறினார் என்றும், சுமார் 12 மணியளவில் உள்ளே சென்று கத்தி வாக்குவாதம் செய்தேன் என்றும், நான் பாரா காவலில் இருப்பதால் என்னை பாதிக்கும் என்று கூறினேன் என்றும், நான் சென்று அரை மணி நேரம் கழித்து அவிழ்த்துவிட்டனர் என்றும், நான் இருக்கும்போது நித்யராஜை யாரும் அடிக்கவில்லை என்றும், வேறு Sheet ல் படுக்க வைத்தனர் என்றும், கை வலிப்பதாக இடது புறமும், வலது புறமும் மாறி மாறி படுக்க வைத்தார்கள் என்றும் ஆய்வாளர் தைலம் தேய்க்குமாறு கூறிய போது மூவரும் தேய்த்துவிட்டனர் என்றும், அதன்பிறகு கை தாங்கலாக அவரை இயற்கை உபாதை கழிக்க

அழைத்துச் சென்று வந்தனர் என்றும், பின்னர் ராமலிங்கம் ஆய்வாளரின் அறையில் அவனை படுக்க வைத்தனர் என்றும், மேற்படி நித்யராஜை நான் இருக்கும்வரையில் மேஜையில் தொங்கவிட்டதிலிருந்து கீழே விழவில்லை என்றும், அவனை இரும்பு ராடுடன் இறக்கி கட்டவிழ்த்தனர் என்றும், மறுநாள் காலை என்னை பணியிருந்து விடுவித்த பாரா காவலர் காளியப்பன் என்பவரிடம் முன்தினம் இரவு கட்டிப் போட்டு வைத்தனர் முடியாமல் படுத்து இருக்கிறான் என்றும், மறுநாள் 1 மணிக்கு வேலைக்கு சென்ற போது அவனை நான் பார்த்தேன் என்றும், மறுபடியும் வேறு பணிக்கு சென்று மறுநாள் காலை 13.01.2012 ம் தேதி காலை பணிக்கு வந்தபோது அவன் அங்கு தான் இருந்தான் என்றும், வேறு பணி காரணமாக அன்றையதினம் 4.00 மணிக்கு சென்றேன் என்றும், அந்த பணி முடிந்த பின்புதான் மறுநாள் காவல்நிலையம் வந்தேன் என்றும், 15 ம் தேதிக்கு வந்தபோது அவன் காவல் நிலையத்தில் இல்லை என்றும், அடைப்பு காவலுக்கு அழைத்துச் சென்றுவிட்டதாக கூறினார்கள் என்றும், காவல் ஆய்வாளர் நித்யராஜை காவல் அடைப்புக்கு செல்லும்போது பிரச்சனையாக இருந்தது என்று கூறினார்கள் என்றும், ராயப்பேட்டை மருத்துவமனையிலிருந்து 16.01.2012 அன்று நண்பகல் 2.00 மணியளவில் வரும்போதே இறந்துவிட்டதாக ஒரு வழக்கு இருப்பதாக கூறினார்கள் என்றும், அதனை நான் எடுக்க முடியாது என்று கூறியபோது எங்கள்

காவல் நிலைய குற்றவாளி நித்யராஜ் என்று தெரிவித்தார்கள் என்றும், அதன் பின்னர், புழல் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தனர் என்றும், மேற்படி நித்யராஜை காவல் நிலையத்தில் வைத்திருந்து எந்த பதிவேடுகளும் இல்லை என்றும், என்னிடமும் ஒப்படைக்கவில்லை என்றும், 13 ம் தேதி rounds செய்ய வந்த உதவி ஆணையர் யாராவது காவல் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளரா என்று கேட்டதாகவும், நானும் நித்யராஜும் இருப்பதாக நான் சொன்னேன் என்றும், ராமலிங்கம் ஆய்வாளர் பார்த்துக் கொள்வதாக உதவி ஆணையரிடம் தெரிவித்ததில் அவர் பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு சென்றதாகவும் கூறிவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும், நான் தற்போது ஆஜர் எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 4 ல் 11, 12 இரு நாட்களிலும் எந்த சந்தேக நபர்களும் நிலைய காவலில் இருந்ததாக குறிப்புகள் இல்லை. 13 ந் தேதியன்று இரவு நித்யராஜ் என்பவரை 11.30 மணியளவில் திரேக பரிசோதனை செய்து முறைப்படி பாராவில் ஒப்படைக்கப்பட்டது என்றால் நான் அன்று இரவு வள்ளுவர் கோட்டம் அருகே பந்தோபஸ்த்க்கு சென்றிருந்தேன். நித்யராஜை யார் வசம் ஒப்படைத்தார்கள் என்பது எனக்கு ஞாபகமில்லை. 14 ம் தேதியும் நான் பந்தோபஸ்த் பணியில் தான் இருந்தேன்.

15ம் தேதி என்னிடம் நித்யராஜை 14ந் தேதி கோர்ட்டில் ஒப்படைத்தாக நிலையத்தில் கூறினார்கள் என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> **–** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**Spl.S.C. No.1/2024**

PROSECUTION WITNESS No. 28

| | |
|---|---|
| Name | : செல்வராஜ் |
| Father's Name | : பிரமையா |
| Age | : 45 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 25th day of November, 2025.

---

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கே10, போக்குவரத்து பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். முதலாவது எதிரி ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களிடம் நான் வாகன ஓட்டுநராக பணிபுரிந்துள்ளேன். மற்ற இரண்டு எதிரிகளும் எங்கள் நிலையத்தில் காவலர்களா பணிபுரிந்தவர்கள். 14.01.2012 அன்றுதான் நான், நிலையத்தில் வாகனம் ஓட்டும் பணிக்கு வந்தேன், மூன்றாவது எதிரி எனது Reliever. அதுவரை அவர்தான் TN 21 G 0596 எண் கொண்ட Tata Spacio

வாகனத்தை ஓட்டி வந்தார். நான் வரும்போது நித்யராஜ் என்பவரை கூட்டி வந்தார்கள். ஆய்வாளர் திரு.ராமலிங்கம், ஜோசப் சிறப்பு உதவி ஆய்வாளர், திரு.அண்ணாமலை உதவி ஆய்வாளர் அல்லது சிறப்பு உதவி ஆய்வாளர், அவர்கள் அண்ணா ஆர்ச் அருகேயுள்ள பர்மா பஜாரில் செல்போன் Recovery க்காக செல்ல அவர்களை நான் வாகனத்தில் அழைத்துச் சென்றேன். அதன்பிறகு அயனாவரம் அழைத்துச் சென்றேன். மாலை எழும்பூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றேன். பின்னர். நியூ ஆவடி ரோட்டிலுள்ள காந்திநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். பின்னர், புழல் மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு நித்யராஜை அட்மிஷன் போட்டு பின்னர் சிகிச்சைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவனைக்கு வாகனத்தில் அழைத்துச் சென்றேன். அங்கு CT Scan எடுப்பதற்காக ராஜுவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். மீண்டும் காலை 6 மணிக்கு விஜயகுமார் என்னை Relieve செய்தார். மீண்டும் 16 ந் தேதி காலை காணும் பொங்கல் பந்தோபஸ்த் duty க்காக மெரீனா பீச் சென்றேன். நித்யராஜ் பின்னர் இறந்துவிட்டதாக கேள்வி பட்டேன். இது சம்பந்தமாக CBCID போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். மேலும் நீதித்துறை நடுவர் எண்.1, திருவள்ளூர், முன்பு 164 குவிமுச வாக்குமூலம் கொடுத்தேன், அந்த 164 குவிமுச வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான்,

அதிலுள்ளது என்னுடைய கையொப்பம்தான், அந்த 164 குவிமுச வாக்குமூலம் **அ.சா.ஆ.25**. நான் 14.01.2012 அன்றுதான் பணிக்குச் சென்றேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |